

# ஸ்ரீ ராகவேந்திரர் குரு கவசம்

1. நாதம் ஒலிக்கும் துங்கை நதியும்
கீதம் ஒலிக்கும் மந்திரா லயமும்
ஆயிரம் நிலவாய் ஒளிரும் வதனமும்
ஆயிரம் பூக்கள் பூக்கும்புன் சிரிப்பும்

2. மின்னலைப் போன்ற இருவிழி ஒளியும்
இன்னல்கள் தீர்க்கும் அபய கரமும்
பாவிகள் பண்படும் பதமலர் அழகும்
காவியம் பாடும் காவியின் அழகும்

3. தேஜஸ் வீசும் தேகத்தின் அழகும்
வாசம் வீசும் பிருந்தாவன அழகும்
தங்க ரதத்தின் தனித்துவ அழகும்
மங்கல ஊஞ்சலில் ஆடிடும் அழகும்

4. மாணிக்க மலைபோல் ஆலய நடுவில்
வாணியின் வீணையை ஏந்திய அழகும்
நித்தமும் பொழியும் கருணையின் அழகும்
அத்தனை அழகும் நெஞ்சினில் நிறையும்

5. குருவின் நாமம் தினமும் ஜெபித்தால்
வரும்வினை மாறும் வல்வினை தீரும்
எண்ணிய யாவும் எளிதினில் அருளும்
கண்கண்ட தெய்வமே காம தேனுவே!

6. அபயம் என்று அடைக்கலம் புகுந்தால்
உபயம் பெற்று உய்வழி அடைவர்
மனங்கொண்ட கவலைகள் மாயைகள் மாற்றி
கனவினில் அருளும் கற்பகத் தருவே!

7. சீர்மிகு சிரசை சீலன் காக்க
கார்குழல் தன்னை கனிவோன் காக்க
ஈர்க்கும் நெற்றியை இறையோன் காக்க
பார்க்கும் விழிகளை பரமன் காக்க

8. கேட்கும் செவியை கேசவன் காக்க
பட்டுக் கன்னத்தை பரிவோன் காக்க
சுவாசிக்கும் நாசியை சுடரோன் காக்க
சுவைக்கும் நாவை சுந்தரன் காக்க

9. அரும்புப் பற்களை அகிலோன் காக்க
சிரிக்கும் இதழ்களை சிறந்தோன் காக்க
நேரிய கழுத்தினை நிமலன் காக்க
விரிந்த மார்பினை விமலன் காக்க

10. பேழை வயிற்றினை பேரருள் காக்க
உழைத்திடும் கைகளை உத்தமன் காக்க
முழங்கால் முழங்கை முதலோன் காக்க
களைத்திடா வண்ணம் கால்களைக் காக்க!

11. உடலுக்குள் இருக்கும் உறுப்புக்கள் அனைத்தும்
திடமாய் இருக்க நீஎமக் கருள்வாய்
தீர்க்கும் நோய்கள் தாங்கிடும் சக்தியும்
தீரா நோய்கள் வாராதும் அருள்வாய்

12. எனக்கு எதிராகத் தீயன நினைப்போர்
மனமது மாறி தூயன செய்ய
நல்லன கெட்டன இருவகை அறிந்து
நல்லன செய்யவும் நீஎமக் கருள்வாய்

13. விதித்ததை ஏற்று விருப்போடு வாழவும்
மதியால் மாற்றம் உருவாக்கிடவும்
சதிகள் எல்லாம் அன்பால் தகர்க்கவும்
புதிய பாதையைக் காட்டிநீ அருள்வாய்

14. குறைவற்ற கல்வியும் குன்றா வளமும்
நிறைவான செல்வமும் நீஎமக் கருள்வாய்
நெஞ்சினில் அமைதி என்றும் நிலைத்திட
சஞ்சலம் நீங்கிட நீஎமக் கருள்வாய் 56

15. சுற்றமும் நட்பும் சுகம்பல பெற்று
ஒற்றுமை உணர்வுடன் வாழநீ அருள்வாய்
பாரினில் பாசம் நேசம் பெருகி
போரின்றி வாழ நீஎமக் கருள்வாய் 60

16. வேதனை சூழ்ந்த வேளையில் உடன்வந்து
சாதனை புரிய நீஎமக் கருள்வாய்
பலவகைத் தேவைகள் பரிவுடன் புரிந்து
உலகினில் புகழ்பெற நீஎமக் கருள்வாய் 64

17. இருளினில் இருப்போர் இல்லம் ஒளிர்ந்திட
இருவினை அகற்றி இடுக்கண் களைந்திட
துன்பத்தில் துடிப்போர் கண்ணீர் துடைத்திட
என்மனம் கசிந்திட நீஎனக் கருள்வாய் 68

18. புவியினில் உம்பணி தொடர்ந்து நடந்திட
புவனகிரி மைந்தா நீஎமக் கருள்வாய்
பயன் கருதாத பக்தியைச் செலுத்தும்
உயர்நிலை அடைய நீஎமக் கருள்வாய் 72

19. குருவே என்றும் உம்மை நினைக்க
குருவே என்றும் உம்மைப் பாட
குருவே என்றும் உனைச்சரணடைய
குருவே என்றும் நீயே அருள்வாய் 76

20. திம்மண்ண பட்டர் கோபி காம்பாள்
மகனாய் உதித்த மகானே வருக
சரஸ்வதி ஆணையால் சந்நியாசம் ஏற்றிட்ட
சரஸ்வதி பாயின் ஸ்ரீபதி வருக 80

21. மிருத்திகை கொண்டு பூதம் அடக்கிய
பெருநோய் தீர்த்து போர்வை அணிந்த
மாம்பழச் சாற்றில் மகவைக் காத்த
கும்பகோண வாசா குருவே வருக 84

22. செந்நிற அட்சதையை கருப்பாய் மாற்றிய
மந்த்ராலய வாசா மாதவா வருக
கருநிற அட்சதையை சிவப்பாய் மாற்றிய
பிருந்தா வனனே பிரகலாதா வருக 88

23. அக்னியில் இட்ட ரத்தின மாலையை
அக்னியில் மீட்ட அற்புதா வருக
மாமிசம் அதனை மலராய் மாற்றிய
பூமியின் புதல்வா பூரணா வருக 92

24. பாமரன் படித்து திவானென ஆக்கிய
ராம பக்தா ராகவேந்திரா வருக
நதிநீர் விலக்கி நல்வழி காட்டிய
கதிஎன்று வருவோர் கதியே வருக 96

25. ஆறுதல் அளிக்கும் ஆண்டவா போற்றி
தேறுதல் தந்திடும் தேவா போற்றி
தன்னலம் அற்ற தாயே போற்றி
என்நலம் பேணும் எந்தையே போற்றி 100

26. வாதினில் வென்ற வரதா போற்றி
சூதினை வென்ற சுடரே போற்றி
ஜாதிபேத மில்லா சத்யனே போற்றி
ஜோதியாய் ஒளிரும் சொரூபா போற்றி 104

27. சரணம் சரணம் மத்வகுரு சரணம்
சரணம் சரணம் ஜெகத்குரு சரணம்
சரணம் சரணம் சத்குரு சரணம்
சரணம் சரணம் ராகவேந்திரா சரணம் 108

ராகவேந்திரர் அருளால் ஆக்கியோர்
திருமதி. **ஜெயா இளங்கொடி பொன்சிவராம்,** M.Sc.,P.G.D.G.C.,
கன்னியாகுமரி, மகாதானபுரம் பிருந்தாவனம்.

ஸ்டார், சுசீந்திரம். செல் : 94428 32018